# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADUTEACHERSEDUCATIONUNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai – 600 097.
Phone No.044-28389040/43 E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in


**No. TNTEU/R/Admin./Circular/2020/** 848 **Date:** 25.09.2020

**Dr.V.Balakrishnan. Ph.D.**
**REGISTRAR (i/c)**

பெறுதல்

முதல்வர்கள்
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை) அவர்கள் வெளியிட்ட கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவைத் தொடங்குதல் தொடர்பான அறிவிப்பு – கடிதம் வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. கடித எண்.10706/ஏ1/2020-1, நாள்.15.09.2020 தேதியிடப்பட்ட உயர் கல்வித் (ஏ2) துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம்.
2. இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் இணையக் கல்விக் கழகம் அவர்களிடமிருந்து மின்னஞ்சல் மூலம் வரப்பெற்ற கடித எண். 503802/த.த.பே/2020-01, நாள் 10.06.2020.

-----

பார்வையில் 1 மற்றும் 2-ல் காணும் மனுவில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை) அவர்களால் 24.03.2020 அன்று அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவைத் தொடங்குதல் தொடர்பான அறிவிப்பிற்கிணங்க, கணித்தமிழ்ப் பேரவையைத் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் தொடங்கிச் செயற்படுத்துமாறு அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகளும் கணித்தமிழ்ப் பேரவையினை தங்களது கல்லூரிகளில் தொடங்கி அதன் அறிக்கையினை அரசுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக வருகின்ற 15.10.2020-க்குள் இப்பல்கலைக்கழகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கணித்தமிழ் பேரவை தொடங்குவது தொடர்பான மேலும் விவரங்களுக்கு **Dr.K**.விஜயா, உதவி பேராசிரியர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அலைபேசி எண்.9500114575 அவர்களை தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

25/9/2020
பதிவாளர்(பொ)

இணைப்பு: தமிழக அரசின் ஆணையின் நகல்.

Scanned with CamScanner

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

(முந்தைய தமிழ் இணையப் பல்கலைக்கழகம்)

# Tamil Virtual Academy

*(Erstwhile Tamil Virtual University)*

துரை. இரவிசந்திரன், இ.ஆ.ப. / D. Ravichandran, I.A.S.
இயக்குநர் (மு.கூ.பொ.) / Director (FAC)

கடித எண்: 503802/[illegible]/2020/01 நாள்: 10.06.2020

02 SEP 2020
10706

பெறுநர்.

அரசு முதன்மைச் செயலாளர்.
உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம்.
சென்னை – 600 009.

அய்யா,

பொருள் : த.இ.க. – தகவல் தொழில்நுட்பவியல் துறை – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை (ம) தகவல் தொழில்நுட்பத் துறை) அவர்கள் வெளியிட்ட கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவைத் தொடங்குதல் தொடர்பான அறிவிப்பு – அனைத்து கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குக் கடிதம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : அரசு கடித எண் B-18/2/2020/தகொது(பொது-2), நாள். 20.05.2020

***

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை (ம) தகவல் தொழில்நுட்பத் துறை) அவர்களால் 24.3.2020 அன்று கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவைத் தொடங்குதல் தொடர்பான கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவை (அறிவிப்பு எண்.5)

கல்வி நிறுவனங்கள் தோறும் கணித்தமிழ்ப் பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் 2016 முதல் தமிழகத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் 200 கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கப்பட்டு, அவை சிறப்புடன் செயலாற்றி வருகின்றன. கணித்தமிழ் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை இளைஞர்களிடம் கொண்டு செல்லும் உயரிய நோக்கில், உயர்கல்வித் துறையின் துணையுடன் தமிழகத்தில்

Scanned with CamScanner

உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளிலும் கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கிடத் தேவையான நடவடிக்கைகள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

கணினித் தமிழின் இன்றியமையாமையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் அடிப்படையில் தமிழ்நாட்டின் பல உயர்க்கல்வி நிறுவனங்களில் **"கணித்தமிழ்ப் பேரவை"** என்ற ஓர் அமைப்பு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இக்கணித்தமிழ்ப் பேரவையானது. இணையத்தில் தமிழின் பங்களிப்பை வளப்படுத்துதல், வலுப்படுத்துதல் கணித் தமிழ் மற்றும் தமிழ் பயன்பாட்டு மென்பொருள்களை உருவாக்கம் செய்ய ஊக்குவித்தல் என்பதை நோக்கமாக் கொண்டது. இப்பேரவையில் பல மாணவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து வருகின்றனர்.

கணித்தமிழ்ப் பேரவையைத் தொடங்கிச் செயல்படுத்தக் கணித்தமிழில் ஆர்வமுள்ள, தமிழ்த்துறை, கணினித்துறை பேராசிரியரைத் துறைக்கு ஒருவர் என, இருவரை ஒருங்கிணைப்பாளராக நியமித்து (தமிழ்த்துறை இல்லாத கல்லூரிகளில் கணித்தமிழில் ஆர்வமுள்ள இருவரை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கலாம்) அவர்களின் பெயர், மின்னஞ்சல், அலைபேசி எண் ஆகிய விவரங்களைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு வழங்கினால் அவர்களுடன் த.இ.க. இணைந்து செயல்படவும் வழிகாட்டவும் தயாராக உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. கணித்தமிழ்ப் பேரவையயின் செயல்பாடுகள் பின்வருமாறு

செயல்பாடுகள்:

- கணினி சார் செயல்பாடுகளில் தமிழ் வழி பங்களிப்பின் அடிப்படையில் கணினி, தமிழ் செயல்பாட்டை ஊக்குவித்தல்.
- கணிப்பொறியில் தமிழ் உள்ளீட்டுப் பயிற்சியினை ஆசிரியர்கள், மாணவர்கள், கணிப்பொறி ஆர்வலர்களுக்கு வழங்குதல்.
- கட்டற்ற மென்பொருள் பயன்பாட்டை முன்னெடுத்தல்.
- கணித்தமிழ்த் திருவிழா நடத்துதல் தமிழ் மென்பொருள், குறுஞ்செயலி உருவாக்கம், மின் உள்ளடக்கப் பயிற்சி வழங்குதல்.
- கணித்தமிழ் சார்ந்த பயன்பாட்டை ஊக்குவிக்க கோடைக்கால முகாம் நடத்துதல்.
- கலைக்களஞ்சியங்களைத் தமிழில் உருவாக்குதல்.

Scanned with CamScanner

மேற்படி கணித்தமிழ்ப் பேரவையைத் தமிழக அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைத்து கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தொடங்கிச் செயற்படுத்துமாறு அனைத்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் துணைவேந்தர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கவும் அவ்வாணையின் நகலை த.இ.க விற்கு அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல் :

அரசு கூடுதல் தலைமைச் செயலர் (மு.கூ.பொ)
தகவல் தொழில்நுட்பவியல் துறை
சென்னை – 600 009

ஒப்பம்
இயக்குநர்

//உண்மை நகல்//

இயக்குநருக்காக

Scanned with CamScanner